بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 22/05/2026 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

# பணிவு மற்றும் தன்னடக்கத்தின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயரிய நல்லொழுக்கங்களின் மனம் கவரும் குறிப்புகள்

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ﴿۲﴾ اَلرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۳﴾ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ﴿۵﴾ اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ۬ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வாழ்வின் ஒரு பகுதியான பணிவு மற்றும் தன்னடக்கம் குறித்து கூறப்பட்டு வந்தது. இன்றும் அதே குறிப்புதான் எடுத்துரைக்கப்படும். அன்னாருடைய பணிவின் தரம் எத்தகையதாக இருந்தது என்றால், சின்னச் சின்ன விஷயங்களின் மூலம் உதாரணங்களைக் காட்டி அன்னார் அதனை வெளிப்படுத்தி வந்தார்கள்.

**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்**: “ஓர் அடிமை எவ்வாறு உண்பாரோ, அவ்வாறே நானும் உண்கிறேன்; ஓர் அடிமை எவ்வாறு அமர்வாரோ, அவ்வாறே நானும் அமர்கிறேன். ஏனெனில், நானும் ஓர் அடியான் தானே.”

அதாவது, தலைவர்கள் மற்றும் செல்வந்தர்களுக்குரிய பெருமையோ, சுயநலமோ, பகட்டோ என்னிடத்தில் இல்லை என்றார்கள்.

**ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்**: “ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் ஓர் ஒட்டகம் இருந்தது. அதன் பெயர் அஸ்பா (عضباء) என்பதாகும். அது எத்தகைய வேகத்தைக் கொண்டிருந்தது என்றால், எந்தவோர் ஒட்டகமும் அதனை முந்திச் செல்ல முடியாது. ஒருமுறை ஒரு கிராமவாசி தனது இளம் ஒட்டகத்தின் மீது அமர்ந்து வந்தார்; போட்டியில் அந்த ஒட்டகம் அஸ்பாவை விட முந்திச் சென்றுவிட்டது. அஸ்பா பின் தங்கிவிட்டதே, நீர் எப்படி முந்திச் செல்லலாம் என்று முஸ்லிம்கள் அவரிடம் கேட்டனர். முஸ்லிம்களுக்கு இது கடும் மனவருத்தத்தை ஏற்படுத்தியது. மக்களின் இந்த அணுகுமுறையைக் கண்ட ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், இவ்வுலகில் எந்த பொருளை அல்லாஹ் உயர்த்தி வைக்கிறானோ, அதனை அவன் தாழ்த்தவும் செய்கிறான்; இது அல்லாஹ்வின் அதிகாரமாகும் என்று கூறினார்கள்.”

**பணிவிற்கான மற்றுமோர் உதாரணத்தை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எடுத்துரைக்கிறார்கள்**: “நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் உம்ராவிற்காக அனுமதி வேண்டினேன். அன்னார் எனக்கு அனுமதி வழங்கியதோடு, எனது சகோதரரே! உமது துஆக்களில் என்னை மறந்துவிடாதீர் என்று கூறினார்கள்.”

**ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்**: “அன்னார் எவ்வாறான ஒரு விஷயத்தைக் கூறினார்கள் என்றால், இந்த ஒரு வார்த்தைக்குப் பகரமாக எனக்கு இவ்வுலகம் முழுவதுமே கிடைத்திருந்தாலும் கூட எனக்கு இந்தளவுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டிருக்காது.”

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதுவதை அல்லாஹ் கடமையாக்கியுள்ளான்; மேலும், துஆக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கும் அதனை ஒரு நிபந்தனையாக ஆக்கியுள்ளான். ஆனால், அன்னாரது பணிவின் உச்சக்கட்டம் எத்தகையதாக இருந்தது என்றால், அன்னார் தம்மை பின்பற்றக்கூடிய ஒருவரிடம், எனக்காக துஆ செய்வீராக என்று கூறுகிறார்கள்!

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்தவொரு வேலையைச் செய்வதையும் ஒருபோதும் கௌரவக் குறைச்சலாகக் கருதியதில்லை. மிகச் சிறிய வேலையாக இருந்தாலும் அதனைத் தாமே செய்து மற்றவர்களுக்குக் காட்டினார்கள்; இன்னும் கூறுவதென்றால், (மற்றவர்களுக்குக்) கற்றுக் கொடுத்தும் வந்தார்கள்.**

**உதாரணமாக, ஓர் அறிவிப்பு இவ்வாறு உள்ளது**: "ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு சிறுவனைக் கடந்து சென்றார்கள். அவன் ஓர் ஆட்டின் தோலை உரித்துக் கொண்டிருந்தான். அப்போது அன்னார் அவனைச் சற்றே விலக்கிவிட்டு, "கொஞ்சம் பின்னால் வா; நான் உனக்குச் சரியான முறையைக் காட்டுகிறேன். ஏனெனில், தோல் உரிப்பதில் உனக்கு அந்தளவுக்குத் தேர்ச்சி இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை என்று கூறினார்கள். பின்னர் அன்னார் தமது கைகளைத் தோலுக்கும் இறைச்சிக்கும் இடையில் நுழைத்தார்கள். எந்த அளவுக்கென்றால், அது அன்னாரின் அக்குள் பகுதியை மறைத்து விட்டது. பிறகு அன்னார், சிறுவனே! இவ்வாறு செய்; இந்த முறையில் தோல் உரி என்று கூறினார்கள்."

அன்னார் அவனது முழு வேலையையும் செய்து கொடுத்ததோடு, அவனுக்குக் கற்றும் கொடுத்தார்கள்.

**ஹஸ்ரத் கப்பாப் (ரலி) அவர்களின் மகளிடமிருந்து அறிவிக்கப்படும் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது**. "அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் ஆட்டின் பாலைக் கறப்பதற்காக ஆட்டைக் கொண்டு வந்தார். அன்னார் அந்த ஆட்டைக் கட்டிப்போட்டு, அதன் பாலைக் கறந்தார்கள். பிறகு அன்னார், உன்னிடமிருக்கும் பெரிய பாத்திரத்தை என்னிடம் கொண்டு வா என்று கூறினார்கள். (ஹஸ்ரத் கப்பாப் ரலி..., அவர்களின் மகள் கூறுகிறார்) ஆகவே, நான் ஒரு பெரிய பாத்திரத்தைக் கொண்டு வந்தேன்; அன்னார் அதில் பால் கறந்தார்கள்; அது நிரம்பி விட்டது. பின்னர் அன்னார், நீயும் குடி; உனது அண்டை வீட்டாருக்கும் கொடு என்று கூறினார்கள்."

**ஸலாம் கூறுவதிலும், சபைகளில் அமர்வதிலும் கூட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பணிவான நிலையும், மிக உயரிய நல்லொழுக்கங்களின் முன்மாதிரியும் நமக்குக் காணக்கிடைக்கிறது. உதாரணமாக, ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்**: "யாரேனும் ஒருவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு முன்னால் வந்தால், அன்னார் அவருடன் கைகுலுக்குவார்கள். அந்த நபர் தனது கையைத் தானாகவே பின்னுக்கு இழுக்கும் வரை, அன்னார் தமது கையை அவரது கையிலிருந்து விடுவித்துக் கொள்ள மாட்டார்கள். அதேபோன்று, அந்த நபர் தனது முகத்தைத் தானாகவே திருப்பிக் கொள்ளும் வரை, அன்னார் தமது அருளுக்குரிய முகத்தை அவரது முகத்தை விட்டு திருப்பிக் கொள்ள மாட்டார்கள். மேலும், அன்னாருடன் அமர்ந்திருப்பவர்களுக்கு முன்னால், அன்னார் தமது கால்களை நீட்டி அமர்ந்திருப்பதை எவரும் ஒருபோதும் கண்டதில்லை."

**அன்னாரிடம் எந்தவொரு தற்பெருமையும் இருக்கவில்லை. ஏழைகளையும் அன்னார் மிகுந்த பணிவோடு சந்தித்து, அவர்களின் உள்ளங்களை மகிழ்வித்து வந்தார்கள்.**

உதாரணமாக, "கிராமத்துவாசிகளில் ஸாஹிர் (زاہر) என்ற பெயர் கொண்ட ஒரு சஹாபி இருந்தார். அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்காக கிராமத்திலிருந்து பல்வேறு பொருட்களைக் கொண்டு வருவார். அவர் திரும்பிச் செல்லும்போது, அன்னாரும் அவருக்கு ஏராளமான பொருட்களையும் செல்வத்தையும் வழங்கி அனுப்பி வைப்பார்கள்.

ஸாஹிர், நமது கிராமத்து நண்பர்; நாம், அவரது நகரத்து நண்பர் என்று அன்னார் கூறுவார்கள்.

ஒரு நாள், ஸாஹிர் சந்தையில் தமது சில பொருட்களை விற்பனை செய்து கொண்டிருந்தார். அப்போது ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் அங்கு வருகை தந்து, அவருக்குப் பின்னாலிருந்து அவரைத் தமது நெஞ்சோடு அணைத்துக் கொண்டார்கள். ஹஸ்ரத் ஸாஹிர் அவர்களால் அன்னாரைப் பார்க்க முடியவில்லை. யார் இது? என்னை விட்டுவிடுங்கள் என்று கூறினார். ஆனால், அவர் திரும்பிப் பார்த்தபோது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை அடையாளம் கண்டு கொண்டார். உடனே, அவர் தமது முதுகை நபி கரீம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய நெஞ்சோடு சேர்த்து தேய்க்க ஆரம்பித்தார். அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், இந்த அடிமையை விலைக்கு வாங்குபவர் யார் என்று கேட்கத் தொடங்கினார்கள். அதற்கு ஹஸ்ரத் ஸாஹிர், அல்லாஹ்வின் தூதரே! அப்படியென்றால் என்னை ஒரு நஷ்டமான வியாபாரப் பொருளாகவே காண்பீர்கள்; என்னை யார் வாங்கப் போகிறார்கள் என்று கூறினார். அதற்கு ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வின் பார்வையில் நீர் நஷ்டமான வியாபாரப் பொருள் அல்ல அல்லது அல்லாஹ்வின் முன்னிலையில் நீர் மிகவும் மதிப்புமிக்கவர் என்று கூறினார்கள்."

**ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்**: "நான் எனது தந்தையிடம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வீட்டிற்குள் நுழையும் போது உள்ள விபரங்களைக் குறித்துக் கேட்டேன். (எனது தந்தை) ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது வீட்டிற்கு வருகை தந்தால், வீட்டில் இருக்கும் நேரத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்துக் கொள்வார்கள். ஒரு பகுதியை அல்லாஹ்வுக்காக அர்ப்பணிப்பார்கள்; ஒரு பகுதியைத் தமது குடும்பத்தினருக்காகவும், இன்னொரு பகுதியைத் தமக்காகவும் ஒதுக்கிக் கொள்வார்கள். பிறகு, தமக்காக ஒதுக்கிய அந்தப் பகுதியையும் தமக்கும் மக்களுக்குமிடையே பகிர்ந்து கொள்வார்கள். அதில், முக்கிய சஹாபிகளின் வாயிலாகப் பொதுமக்களுக்கு மார்க்க விஷயங்களைச் சென்றடையச் செய்வார்கள்; அவர்களிடம் எந்தவொரு விஷயத்தையும் மறைத்து வைக்க மாட்டார்கள்."

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முதன்முதலில் வஹீ இறங்கிய அந்த நேரத்திலும் அன்னாருடைய பணிவும் தன்னடக்கமுமே வெளிப்பட்டது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்**: "முதல் வஹீ ஹிரா குகையில் இறங்கியது. அப்போது ஹஸ்ரத் ஜிப்ராயீல் (அலை) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் முன் தோன்றி اِقۡرَاۡ ஓதுவீராக என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள், எனக்கு ஓதத் தெரியாது என்று கூறினார்கள். இதன் பொருள், இந்தச் சுமை என் மீது சுமத்தப்பட வேண்டாம் என்பதே ஆகும். ஏனெனில், அந்த நேரத்தில் அன்னாருக்கு முன்னால் படித்துக் காட்டுவதற்கு எந்தவொரு புத்தகமும் வைக்கப்பட்டிருக்கவில்லை; மாறாக, ஜிப்ராயீல் அவர்கள் கூறுவதை அன்னார் வாய்மொழியாகத் திரும்பக் கூற வேண்டியிருந்தது. அதனை அன்னாரால் கூறவும் முடியும்; ஆனால், அன்னார் பணிவையே வெளிப்படுத்தினார்கள். ஏனெனில், அல்லாஹ் இந்த மகத்தான பணிக்காக அன்னாரை மட்டுமே தேர்ந்தெடுத்திருந்ததால், ஓதுவீராக என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டது. இறுதியாக, மூன்றாவது முறை கூறப்பட்டபோது அன்னார் ஓதினார்கள்."

**ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்படும் ஓர் அறிவிப்பில் அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்**: "நான் ஒருமுறை ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானேன். அன்னார் அப்போது மேல் தளத்தில் ஒரு பாயில் சாய்ந்திருந்தார்கள்; அன்னாருக்கும் அந்தப் பாய்க்கும் இடையில் எந்தவொரு விரிப்பும் இருக்கவில்லை. அன்னாருடைய தலைக்குக் கீழே பேரீச்ச நார் நிரப்பப்பட்ட ஒரு தோல்த் தலையணை

மட்டுமே இருந்தது. அன்னாருடைய பாதங்களுக்கு அருகில் கருவேல மரத்து இலைகளின் குவியல் ஒன்று இருந்தது. அன்னார் படுத்திருந்த அந்தப் பாயின் அச்சு அன்னாருடைய பக்கவாட்டு உடலில் பதிந்திருந்ததை நான் கண்டேன். இதனைக் கண்டு நான் அழுதுவிட்டேன். அப்போது அன்னார், உம்மை அழ வைக்கும் விஷயம் என்ன என்று கேட்டார்கள். அதற்கு நான், அல்லாஹ்வின் தூதரே! கிஸ்ராவும் கைஸரும் சுகபோகத்தில் திளைத்துக் கொண்டிருக்கிறார்கள்! தாங்களோ அல்லாஹ்வின் தூதராக இருந்தும் இந்த நிலையில் இருக்கிறீர்களே என்று கூறினேன். அதற்கு அன்னார், அவர்களுக்கு இவ்வுலகமும், நமக்கு மறுமையும் கிடைப்பதைக் குறித்து நீர் மகிழ்ச்சி அடையவில்லையா என்று கேட்டார்கள்."

**மிகவும் கடின குணம் கொண்ட மனிதர்களிடமும் அன்னார் எப்போதும் மென்மையையும், பணிவின் உயரிய நற்பண்புகளையும் வெளிப்படுத்தி வந்தார்கள். ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்**: "ஒரு மனிதர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து, தனக்குத் தர வேண்டிய கடனைத் தருமாறு கேட்டார்; அப்போது அவர் மிகக் கடுமையான தொனியில் பேசினார். இதைக் கண்டு சஹாபிகள் கோபமடைந்தனர். ஆனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அவரை விட்டுவிடுங்கள்; அவருக்கு ஓர் ஒட்டகத்தை விலைக்கு வாங்கிக் கொடுத்துவிடுங்கள் என்றார்கள். அவர் கொடுத்த கடனுக்கு நிகரான ஒட்டகம் எங்களுக்குக் கிடைக்கவில்லை; அதைவிட அதிக மதிப்புள்ள ஒட்டகங்களே கிடைக்கின்றன என்று சஹாபிகள் கூறினர். அதற்கு அன்னார், அதையே அவருக்குக் கொடுத்துவிடுங்கள். ஏனெனில், கடனைத் திருப்பிச் செலுத்துவதில் உங்களில் எவர் மிகச் சிறந்தவராக இருக்கிறாரோ, அவரே உங்களில் மிகச் சிறந்தவர் ஆவார் என்று கூறினார்கள்."

மக்கா வெற்றியின் போது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது தந்தையை அழைத்துக்கொண்டு ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள், அவர்களைக் கண்டதும், அபூபக்ரே! வயது முதிர்ந்த இவரை நீர் ஏன் வீட்டிலேயே இருக்கச் செய்யவில்லை? நானே அவரிடம் நேரில் வந்திருப்பேனே என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதரே! தாங்கள் அவரிடம் வருவதை விட, அவரே தங்களின் சமூகத்திற்கு வருவதற்கு அதிகத் தகுதியுடையவர் ஆவார் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், தமது தந்தையை ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் முன்னிலையில் அமர வைத்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவரது நெஞ்சின் மீது தமது கரத்தைத் தடவி, இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்; நீங்கள் பாதுகாப்பில் வந்து விடுவீர்கள் என்று கூறினார்கள். அதன்படியே, (ஹஸ்ரத் அபூபக்ர் ரலி..., அவர்களின் தந்தை) அபூகுஹாஃபா (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள்."

**ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் வீட்டைக் குறித்து ஹஸ்ரத் ஹஸன் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்**: "ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் (வீட்டுக்) கதவு எல்லா மக்களுக்காகவும் திறந்தே இருக்கும். அன்னாருக்காக எந்தவொரு வாயிற்காவலரும் நிறுத்தப்பட்டிருக்கவில்லை. அன்னாருக்காகக் காலையிலும் மாலையிலும் பெரிய பெரிய பாத்திரங்களில் உயர்தரமான உணவுகள் எதுவும் பரிமாறப்படவில்லை. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைச் சந்திக்க விரும்பும் எவரும் மிக எளிதாக அன்னாரைச் சந்தித்துவிட முடியும். அன்னார் தரையில் அமர்வார்கள். எளிமையான, தடித்த ஆடைகளை அணிவார்கள். கழுதையின் மீது பயணம் செய்வார்கள்; தமக்குப் பின்னால் தமது சவாரியில் மற்றவர்களையும் அமர வைத்துக் கொள்வார்கள். மேலும், உணவருந்திய பிறகு தமது விரல்களை உறிஞ்சி அதனைச் சுத்தம் செய்துகொள்வார்கள்."

விரல்களை உறிஞ்சுவது குறித்து ஹஸ்ரத் ஸைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் சாஹிப் (ரலி) அவர்களின் ஒரு குறிப்பு உள்ளது; அதில் ஹஸ்ரத் டாக்டர் மீர் முஹம்மது

இஸ்மாயீல் சாஹிப் (ரலி) அவர்களின் கூற்றைக் குறிப்பிட்டு இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: “மனிதனின் கை விரல்களில் ஒரு பிரத்தியேகமான தொடு உணர்வு சக்தி உள்ளது என்பதில் மருத்துவர்கள் ஏகோபித்த கருத்து கொண்டுள்ளனர். எனவே, உணவு உண்ட பிறகு ஒருவர் தனது விரல்களை உறிஞ்சி சுவைத்துக் கொண்டால், அது செரிமானத்திற்கு மிகவும் பயனுள்ளதாக அமைகிறது.”

**பள்ளிவாசலை சுத்தம் செய்வது குறித்து ஹஸ்ரத் யஃகூப் பின் ஸைத் (ரலி) அவர்களிடமிருந்து வரும் அறிவிப்பில்**, “ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பள்ளிவாசலில் படியும் தூசி மற்றும் புழுதியை ஒரு சிறிய குச்சியைக் கொண்டு சுத்தம் செய்பவர்களாக இருந்தார்கள்” என்று கூறப்பட்டுள்ளது. அதாவது, குச்சியின் நுனியில் ஏதேனும் ஒரு துணியைக் கட்டி அதன் மூலம் தூசிகளைத் துடைத்துச் சுத்தம் செய்தார்கள் என்பதே இதன் பொருளாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்**: “அல்லாஹ் மிக்க கருணையாளனும் அருளாளனும் ஆவான்; அவன் எல்லா விதத்திலும் மனிதனை பரிபாலித்து, அவன் மீது கருணை பொழிகிறான். அவனது இதே கருணையின் காரணமாகவே, அவன் உலக மக்களைப் பாவங்கள் நிறைந்த வாழ்க்கையிலிருந்து மீட்பதற்காகத் தன் சார்பாக நியமிக்கப்பட்டவர்களையும், தனது தூதர்களையும் அனுப்பி வைக்கிறான். ஆனால், ஆணவம் என்பது மிக ஆபத்தான ஒரு நோயாகும்; எந்த மனிதனுக்குள் இந்நோய் உருவாகிறதோ அவனுக்கு அது ஆன்மிக மரணமாகும். இந்த நோய் ஒரு கொலையை விடவும் மிகக் கொடியது என்பதை நான் உறுதியாக அறிவேன். ஆணவம் கொள்பவன் ஷைத்தானின் சகோதரனாக மாறிவிடுகிறான்; ஏனெனில் ஆணவம்தான் ஷைத்தானை இழிவிற்கும் அவமானத்திற்கும் உள்ளாக்கியது. எனவே, ஒரு நம்பிக்கையாளருக்குரிய நிபந்தனை என்னவென்றால், அவரிடம் ஆணவம் இருக்கக் கூடாது; மாறாக, அவரிடம் தன்னடக்கம், பணிவு மற்றும் எளிய நிலை காணப்பட வேண்டும். இதுவே இறைவனால் நியமிக்கப்பட்டவர்களின் தனித்துவமான பண்பாகும். அவர்களிடம் எல்லையற்ற பணிவும் தன்னடக்கமும் இருக்கும்; அதிலும், எல்லாரையும் விட மேலாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் இப்பண்பு மிக அதிகமாக காணப்பட்டது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பணியாளர் ஒருவரிடம், உம்முடன் நபியவர்களின் நடைமுறை எவ்வாறிருந்தது என்று கேட்கப்பட்ட போது, அவர், உண்மையைக் கூற வேண்டுமானால், நான் அன்னாருக்குச் செய்த சேவையை விட அன்னார்தான் எனக்கு அதிக சேவை செய்தார்கள் என்று கூறினார்.” اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَعَلٰى آلِ مُحَمَّدٍ وَبَارِكْ وَسَلِّمْ

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் போதனைகள் மற்றும் அன்னாருடைய நடைமுறையைப் பின்பற்றி, பணிவை மேற்கொள்ளக்கூடிய நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக!

*குத்பாவின் இறுதியில், ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள், முஹம்மது இஸ்ஹாக் சாஹிப் மர்ஹூம் அவர்களின் மகனாகிய மதிப்பிற்குரிய மலிக் தாவூத் மஹ்மூத் சாஹிப் அவர்களின் நற்குறிப்பை எடுத்துரைத்து, அவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பதாக அறிவித்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)